# இஸ்லாமியப் பார்வைக்குள் படைப்பிலக்கியம்

அஷ்ஷைக் எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

தொடர் -01

**அறிமுகம் :**

மனித இனத்தின் நாகரிக வரலாற்று வளர்ச்சிப் படியில், மேல் நோக்கிய நகர்வின் பொற்காலமாக மொழியின் தோற்றம் அமைந்துள்ளது. மானுடத்தை அழகுற சிருஷ்டித்த இரட்சகன், அவனது உணர்வுகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தவும் வழியமைத்துக் கொடுத்தான். இரட்சகன், மனிதனுக்கு வழங்கிய எண்ணிலடங்காத அருள்களில், சிறப்பானதும் முதன்மையானதும் மொழியாகும். மனிதனை சிருஷ்டித்து, அனது உள்ளத்து உணர்வுகளை எல்லாம் வெளிப்படுத்தும் வழியையும் அவனே, மனிதனுக்குக் கற்றுக் கொடுத்தான் என அல்குர்ஆன் அறிவிக்கிறது.

**“அவனே மனிதனைப் படைத்தான். அவனுக்குப் பேச்சுக் கலையையும் கற்றுக் கொடுத்தான்.”**

(அல்குர்ஆன் 55:3-4)

**“அவன் தான், எழுதுகோலின் மூலம் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் அறிவித்துக் கொடுத்தான்.”**

(அல்குர்ஆன் 96:4-5)

மனிதனை, மிக அற்புதமாகவும், அழகாகவும் படைத்த இரட்சகன், அவனது உணர்வுகளையும், கருத்துகளையும் இலகுவில் வெளிப்படுத்தும் வகையில் ஒரு நாவையும், இரண்டு உதடுகளையும், வழங்கினான். இவை, மனிதனது மொழியும் ஆற்றலுக்கு எவ்வளவு துணை புரிகின்றன என்பதை மனிதன் நன்றியோடு நினைவு கூர வேண்டும் என்பதற்காக அல்லாஹ், அந்த அருட்கொடைகளை நினைவு படுத்திக் காண்பிக்கிறான்.

**“மேலும், ஒரு நாவையும் இரண்டு உதடுகளையும் (பேசக் கூடிய வகையில் துணை புரிய உனக்கு, நாம் ஆக்கவில்லையா?)**

(அல்குர்ஆன் 90:9)

எழுத்தும் பேச்சும் அல்லாஹ்வின் மகத்தான இரு அருள்கள். எழுதுகோலை வைத்தே, அவன் மனிதனுக்கு எழுதக் கற்றுக் கொடுத்தான். மனிதன், அவன் பெற்ற மொழி வளத்தினூடாக எழுத்துக் கலையை வளர்த்துக் கொண்டான். எனவே, அவனது மொழியினடியாகவே இலக்கியம் தோன்றி வளர்ந்தது என்பதை மனித இன வரலாற்றினை ஆய்வுக்குட்படுத்துவோர் அறிந்து கொள்வர்.

இலக்கியம் சமுதாயத்தின் இணை பிரியாத அங்கமாக இன்று இருந்து கொண்டிருப்பதால், அது சமுதாய சிந்தனை மாற்றத்திற்கு அழுத்தமான பங்காற்றுவதால், அதுபற்றிய தெளிவை வழங்க வேண்டிய காலத்தின் தேவை ஏற்பட்டுள்ளது. இலக்கியம், மனிதனது அழகுணர்வைச் செம்மைப்படுத்தி, அல்லாஹ்வின் வல்லமையையும் அகிலத்தில் பரந்துபட்டுக் கிடக்கும் முருகியலையும் (Aesthetics) தரிசிக்கின்ற நுண்ணிய உணர்வுகளை அவனில் ஏற்படுத்தி, வளர்த்து, விருத்தியடையச் செய்வதற்குப் பதிலாக, அவனது கீழான, விரச உணர்வுகளைத் தூண்டி, மிருகமாக்கி, வெறியாட்டமாட வைக்கிறது. நம்பிக்கையையும், முற்போக்கு சிந்தனையையும் அவனில் அதிகமாக்குவதற்குப் பதிலாக, நம்பிக்கையீனத்தையும், விரக்தியையும் வளர்த்து, அவனை நடைப்பிணமாக்குகிறது. இந்த இழிநிலை மாற்றியமைக்கப்பட்டு, இளைஞர்களின் குணவொழுக்கங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டுமாயின், சிறந்த இஸ்லாமிய இலக்கியங்கள் தோன்ற வேண்டும்.

எழுத்தின் மகிமை பற்றிப் பேசிய திருமறை, இலட்சியமற்ற, சந்தர்ப்பவாத, சினிமாச் சிங்காரக் கவர்ச்சி, ஆண் - பெண், அந்தரங்கச் சதை விவகார வெறியாட்டங்கள் என்பன பற்றி, வெட்கத்தை விற்று விட்டு எழுதும், அல்லது அவற்றுக்கு வெண்சாமரம் வீசும், சகதியில் எழுந்த சடவாத சிந்தனைக்கு ஆட்பட்ட நரகல் நடை, மஞ்சள் எழுத்தாளர்களைக் கடுமையாகக் கண்டித்து, ஓர் அத்தியாயத்தையே தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது.

மொழியின் வரலாற்றுக்கு இன்றியமையாத சான்று இலக்கியமாகும். மொழியினடியாய் இலக்கியம் தோன்றி, மனிதனின் கொள்கை, கலாசார, சிந்தனை, உணர்வுகளில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது என்பதை, ஆழ்ந்து நோக்கும் எவரிடமிருந்தும், மாறுபட்ட கருத்தியல் எதிரொலிக்க முடியாது.

இலக்கியம் மிகச் சக்திவாய்ந்த ஆயுதம். அது, மனித வாழ்க்கையின் கண்ணாடி மட்டுமல்ல, சமூக வாழ்வை புரட்சி ரீதியாக மாற்றியமைப்பதில், அதற்குப் பாரியதொரு பங்குண்டு என்பதை வரலாற்றைப் படிப்போரால் கண்டு கொள்ள முடியும். ஒரு சமூகத்தின் உணர்வுகளினதும் கலாசார, சிந்தனை மரபுகளினதும் படிமங்களாக இலக்கியம் அமைவதால், கலாசார, சிந்தனைத் தாக்கங்களை ஏற்படுத்த, இலக்கியத்தைச் சாதனமாகப் பயன்படுத்தும் நவீன உத்திகள் சமகாலத்தில் மிகத் தந்திரமாகவும் நுட்பமாகவும் கையாளப்பட்டு வருகின்றன. இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்துவதற்கு, இஸ்லாத்தின் எதிரிகள் இலக்கியத்தை ஒரு சக்தி மிக்க ஆயுதமாகப் பயன்படுத்துவதை நாம் காண முடிகிறது. அத்தகைய சவாலையும் நாம் இதில் இனங்காட்ட எத்தனிக்கிறோம்.

ஒரு சமூகத்திற்குச் சொந்தமான கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களிலிருந்தும் கொள்கை உறுதியிலிருந்தும் ஒழுக்கப் பெறுமானங்களிலிருந்தும் அச்சமூகத்தை அந்நியப்படுத்தும் முயற்சியில் அதற்கு உன்னத இடமுண்டு என்பதை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்த வகையில் இலக்கியத்திற்கும் மனித சமுதாயத்திற்குமிடையிலான தொடர்பு இறுக்கமானதும் நெருக்கமானதுமாகும். அது, சமுதாயத்தினடியாகத் தோன்றி, மனிதனின் மகிழ்ச்சியையும், உள்ளக் கிடக்கையும், சோகத்தையும், கவலையையும், களிப்பையும், நம்பிக்கையையும், ஆசைகளையும், ஆவல்களையும், அவலத்தையும், கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பிரதிபலித்துச் செல்கிறது.

கார்ல் மார்க்ஸும் அவருடைய நண்பர் எங்கல்சும் இணைந்து நடத்திய சமுதாய, பொருளாதார ஆய்வுகளில் 20-ஆம் நூற்றாண்டின் வாழ்வியலையும் சிந்தனைப் போக்குகளையும் பெருமளவில் மாற்றியமைத்ததோடு, தற்கால இலக்கியப் படைப்புகள் மீதும் அணுகுமுறைகள் மீதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தினர்.

“உலக இயக்கத்திற்கும், வரலாறு, கலை போன்றவற்றின் செயற்பாட்டிற்கும் தூண்டுகோலாக, அடித்தளமக இருப்பது பொருளாதாரப் பிரச்சினைகளே!” என்பதைக் கார்ல் மார்க்ஸும் அவரது சிந்தனைகளை அடித்தளமாகக் கொண்டு, சமூகவியல் ஆய்வினைத் தொடர்ந்த அறிஞர்களும் விளக்கிக் காட்ட பகீரதப் பிரயத்தனப்பட்டுள்ளனர்.

**“இலக்கியவாதிகள், மனித சமுதாயத்தை நிர்மாணிக்கும் கட்டடக் கலைஞர்கள்”** எனப் பொதுவுடமை வாதியான ஸ்டாலின் கூறி, மனித சமூக நிர்மாணத்தை நெறிப்படுத்தும் இலக்கியத்தின் வல்லமையை விளக்கினார். அதேபோன்று, சிறந்த கட்டடக் கலைஞன் நல்ல கட்டடத்திற்கு ஓர் அமைப்பு, தோற்றம், ஒழுங்கு என்பவற்றைக் கொடுப்பது போன்று, அதற்கு மாற்றமான கட்டடக் கலைஞன் இருப்பான் என்பதை மறுதலிக்க முடியாது. முதங்களைப் புறக்கணித்துப் பரட்சி செய்த மாக்ஸியவாதிகள் தங்கள் மத எதிர்ப்புணர்வை வெளிப்படுத்த இலக்கியத்தை பெரும் ஆயுதமாகப் பயன்படுத்திவருகின்றனர். அந்தவகையில், ஸ்டாலினின் கருத்து இலக்கியத்தின் சக்தியையும் பலத்தையும் நமக்கு உணர்த்தி நிற்கிறது.

இலக்கியம் என்றால் என்ன? அது பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் யாது? அது, எவ்வகையில் மற்றய கோட்பாடுகளிலிருந்து வேறுபடுகிறது? முஸ்லிம் புலவர்களது, இலக்கியவாதிகளது ஆக்கங்களை இஸ்லாமிய அடைமொழிகளோடு, நோக்க முடியுமா? என்பன பற்றிய தெளிவைப் பெற்று, இஸ்லாமிய இலக்கியத்தின் செல்நெறியை புரிந்து கொள்வது அவசியமாகும்.

பல்வேறு கொள்கைகள் மிகச் சாதாரணமாகவே மனிதச் சிந்தனையில் ஊடுருவி, ஆதிக்கம் செலுத்தும் இன்றைய காலகட்டத்தில், இஸ்லாத்தையும், அதன் இலக்கியக் கோட்பாட்டையும் புரிவதில் தவறிழைத்துக் கொண்ட சில முஸ்லிம் பெயர் தாங்கிகள், மேற்கின் இஸ்லாமிய விரோதப் போக்கை இனாமாகப் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளனர். எனவே, இஸ்லாத்திற்குப் புறம்பான சிந்தனைத் தளத்தில் நின்று கொண்டு, ''இலக்கியம் என்பது, அழகுணர்வுத்தேவை வெளிப்பாடு. 'கலை கலைக்காகவே' என்ற நோக்கில் அணுகப்படல் வேண்டும். அதனை, இரசனை உணர்வுடன் அனுபவித்துச் சுவைத்து, இன்புறல் வேண்டும். அதை மதம் என்ற குறுகிய வேலிக்குள் சிறையிட முயற்சித்தல் எந்த வகையிலும் அறிவுடைமையாகாது. அவ்வாறே, இஸ்லாமிய நோக்கில் முஸ்லிம் புலவர்களின் ஆக்கங்களை அணுகி ஆராய்தல் என்பதும் அர்த்தமற்ற ஒரு வீண் முயற்சியாகும்'' என சில விமர்சனக் குரல்கள் எழுந்துள்ளன.

''எஸ்.ஜே.வி.யை என் இறக்கைகளில் காணுங்கள் எனும் கவிதை பிரசுரமானபோது, சிலர் மத நிலை நின்று அதனை விமர்சித்தனர். அவர்கள் கவிஞனின் பாஷையைப் புரிந்து கொள்ளாதவர்கள். அல்லாமா இக்பாலின் 'ஜாவிது நாமா'வை அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும்'' என்ற கலாநிதி எம்.ஏ., நு.்மான் அவர்கள், எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் அவர்களின் ''நான் எனும் நீ'' எனும் நூலுக்கான அணிந்துரையில் குறிப்பிடும் இக்கருத்து, நாம் மேலே குறிப்பிட்டதற்கோர் மிக அண்மைய உதாரணமாக உள்ளது.

எஸ்.ஜே.வி என்பவர் மாற்று மதத்தவர். எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள், 'எஸ்.ஜே.வியை என் இறக்கைகளில் காணுங்கள்' என்ற கவிதையில், அவரை தாம் சுவனத்துக் கன்னிகளிடமிருந்து பறித்துக் கொண்டு, பூமிக்கு வருவதாக வர்ணிக்கிறார். இவரின் கருத்து பகுத்தறிவிற்கு அப்பாற்பட்டது. மரணித்தவர் மீள உலகிற்கு வரமாட்டார் என்பது நாமறிந்த ஒன்று. அப்படியிருந்தும் இதற்கு வக்காலத்து வாங்குவது என்பது என்னவோ? சேல்வ நாயக்தைப் பற்றி கவிதை எழுதக் கூடாது என்று நாம் வாதிடவில்லை. அதை அறிவுப் பூர்வமாக, வேறு வகையில் அமைத்திருக்கலாம். இஸ்லாத்தின் அடிப்படையைத் தகர்ப்பதாகவும் பகுத்தறிவுக்கு முரணாகவும் புகழ்ச்சி வரம்பைக் கடந்து சென்றதாலுமே, பலர் அதனை மதநிலை நின்று விமர்சித்தனர் என்பதை நடுநிலையோடு நோக்கியிருந்தால், அவ்வார்த்தை பிரயோகம் பிறந்திருக்காது என்பதே எமது கருத்து.

எனவே, முஸ்லிம்களால் ஆக்கப்படும் இலக்கியங்கள் அனைத்தும், அவை, இஸ்லாமிய நெறிமுறைகள், விசுவாசக் கோட்பாடுகள், அதன் வரம்புகள், கண்ணோட்டங்கள் அனைத்தையும் மீறி, இஸ்லாமிய அகீதாவுக்கு முரணான, எதிரான எந்தக் கருத்துக்களை உள்ளடக்கியிருந்தாலும் சரியே. அவை, இஸ்லாமிய இலக்கியமெனக் கொள்ளப்படல் வேண்டும். அது விமர்சனத்திற்கு உட்படுத்தப்படல் பொருத்தமற்றது என்ற கருத்து மயக்கம் நிலவும் இன்றைய கால கட்டத்தில், அது பற்றிய சிந்தனைத் தெளிவை வழங்குவது காலத்தின் கடமையாகும்.

இஸ்லாத்தின் சர்வ வியாபகத் தன்மை, அதன் ஆழமான பல்வேறு பரிமாணங்கள், பிரபஞ்சம், அதில் மனிதனது வாழ்வு தொடர்பான விரிந்த ஆன்மீக, உலகியல் நோக்கு, இஸ்லாத்தின் தெய்வீகத் தன்மை, என்பன பற்றிய அறிவையும் சிந்தனைத் தெளிவையும் பெற்றோர் இதன் அவசியத்தை உணர்ந்து, நமது விமர்சன அணுகுதலை ஜீரணித்துக் கொள்வார்கள் என நாம் நம்புகின்றோம்.

எமது சமகால இலட்சிய வாதங்களான முதலாளித்துவமும் கம்யூனிஸ பொதுவுடமைவாதமும் இலக்கியத்தினூடாகவே அதிகமதிகம் பிரசாரப்படுத்தப்படுகிறது. இச்சித்தாந்தத்திற்குள் சிறைப்பட்டவர்கள், அக்கொள்கைப் பிரசார சாதனமாக இலக்கியத்தையே எடுத்துக் கொள்கிறார்கள். மக்களின் உணர்வுகளைத் தூண்டி, அவர்களது சிந்தனை, கருத்துக்களில் இலக்கியத்தினூடாக ஊடுருவி, ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். அதேபோல், இஸ்லாத்திற்கு எதிரான சக்திகள், இஸ்லாத்தின் தூய்மையான ஏகத்துவக் கருத்துக்களை மாசுபடுத்தியும், அதன், பகுத்தறிவு பூர்வமான போதனைகளை திரித்தும் சிதைத்தும் பிரசாரம் செய்வதிலும், முஸ்லிம் உலகிற்கு எதிராக ஏனைய மக்களை அணிதிரளச் செய்வதற்கும், முஸ்லிம்கள் உயிரினும் மேலாக மதிக்கும் திருத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் புனிதமான அப்பழுக்கற்ற ஆளுமைக்கு மாசு கற்பிக்கும் பிரயத்தனங்களிலும் இலக்கியத்தினூடாக ஈடுபட்டுள்ளனர். இதன் பிரதிபலிப்பு, இன்று பிரத்தியட்சமாகவே தென்படுகிறது.

சடவாத சிந்தனையால் ஆகர்ஷிக்கப்பட்ட, இஸ்லாம் தெரியாத, இஸ்லாமிய உம்மத்தில் தோன்றிய, இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனைப் போக்குள்ள நவீனத்துவ வாதிகளான, மேற்கின் சாக்கடைகளுக்கு கூஜா தூக்கி வயிற்றைக் கழுவும் சல்மான் ருஷ்தி, தஸ்லீமா நஸ்ரின், நஜீப் மஹ்பூழ், தோப்பில் முஹம்மது மீரான், சாரா அபூபக்கர் போன்ற இன்னும் பலர், தமது கீழான இஸ்லாமிய விரோதப் போக்குச் சிந்தனையை மக்கள் மன்றத்தில் ஜனரஞ்சகப்படுத்துவதற்கு இலக்கியத்தையே ஊடகமாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இலக்கியப் பரிமாணங்களான பாட்டும், கவிதையும், நாடகமும், சிறுகதையும், நாவலும், அத்தோடு சினிமாவும் சத்தியத்தை அசத்தியமாகவும், அசத்தியத்தை சத்தியமாகவும், மெய்மைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும், உண்மையை உளரலாகவும், உளரலை உண்மையாகவும், திரிவுபடுத்தி, அழகூட்டி, கவர்ச்சியாக்கி, உயிர் கொடுத்து உணர்ச்சியூட்டிச் சொபல்ல வல்லனவாகிவிட்டன.

(இன்னும் வளரும் – இன்ஷா அல்லாஹ்)